பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 6-00

கூடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆவணி 02 ஞாயிற்றுக்கிழமை (18-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 183

இடம் பெயர்ந்தோரில் பலர் மல்லாவி நகரில்

உணவு, குடிதண்ணீர் பற்றாக்குறை

மணிலா, ஓக. 18

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம் பெறும் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த சுமார் இரண்டு லட்சம் மக்களில் கணிசமான எண்ணிக்கையானோர் மல்லாவி நகரில் தான் தங்கியுள்ளனர்.

உணவு இல்லாமல் பட்டினி நிலை, மோசமான குடி தண்ணீர் பற்றாக்குறை, கடும் வெயில், தாங்கமுடியாத குளிர் ஆகியவற்றுக்கு மத்தியில் வீதியோரங்களில் வாட வேண்டிய நிலைக்கு அங்குள்ள மக்கள் உள்ளாகியிருக்கின்றார்கள்.

சர்வதேச தொண்டு நிறுவனங்கள் இத் தகவல்களை ஊர்ஜிதப்படுத்தியிருப்பதாகச் செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது.

மல்லாவி மருத்துவமனை நோயாளிகளால் நிரம்பி வழிகின்றது. கிளிநொச்சி மருத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

லண்டனில் ஈழத்தமிழர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

லண்டன், ஓக. 18

இலங்கையில் தமிழ்ப் பகுதிகளில் இடம் பெறும் இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு கோரியும், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பிரிட்டனில் ஈழத்தமிழர்கள்நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றையும் பொதுக் கூட்டம் ஒன்றையும் நடத்தினர்.

லண்டன் மத்திய பகுதியில் டெம்பிள் பிளேஸில் ஆரம்பித்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஹைட் பார்க்கில் கூட்டத்துடன் முடிவுற்றது.

ஊர்வலத்திலும் கூட்டத்திலும் சுமார் இரண்டாயிரத்து ஐநூறு பேர் பங்குபற்றினர் என பி.பி.ஸி. தெரிவித்தது

ஊர்வலத்தில் சென்றோர் வழியில் இந்தியத் தூதரகம் ஊடாக இந்தியப்பிரதமருக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்றையும், டவுனிங் வீதியில் பிரிட்டிஷ்பிரதமருக்கு முகவரியிடப்பட்ட மகஜர்ஒன்றையும் சமர்ப்பித்தனர்.

ஊர்வலத்தில் சென்றோர் இலங்கை நிலைமை தொடர்பாக தமது கோஷங்கள் மூலமும் தாம் தாங்கிச் சென்ற பதாகைகள் மூலமும் வெளியிட்ட கோரிக்கைகள், தகவல்கள் வருமாறு:-

★ இராணுவ நடவடிக்கையை நிறுத்து!

★ பொருளாதாரத் தடை மற்றும் உணவு, மருந்துப் பொருள்கள் மீதான தடைகளை நீக்கு!

★ மருத்துவ மனைகளைத் தாக்காதே!

(6 ஆம் பக்கம் பார்க்க)

நல்லூர் உற்சவம் இம்முறை மிக அடக்கமான முறையில்!

மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 18

நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நல்லூர் கந்த சுவாமி கோயில் வருடாந்த உற்சவம் இம்முறை மிகவும் அடக்கமான முறையில்— கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை மிக மிக மட்டுப்படுத்தப்பட்ட நிலையில்— நடைபெறவுள்ளது;

இது சம்பந்தமான தீர்மானங்களை யாழ். அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார் என்று யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் திரு. ரி. வைத்திலிங்கம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்திருக்கின்றார்.

நல்லூர் உற்சவம் தொடர்பான அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

★ உற்சவம் தொடர்பான சகல பூசைகளும், திருவிழா வைபவங்களும் உள் வீதியிலேயே நடைபெறும்.

★ 19-08-96, 11-09-96, 12-09-96 ஆகிய திகதிகளில் (முறையே கொடியேற்றம், தேர், தீர்த்தம்) மட்டுமே சுவாமி வெளி வீதியில் உலா வருவதாக இருக்கும்.

★ தினமும் 100 — 150க்கு இடைப்பட்ட பக்தர்களே அனுமதிக்கப்படுவர். ஆனால் கொடியேற்றம், தேர், தீர்த்தம் ஆகிய உற்சவ தினங்களில் 2000க்கு மேற்படாத பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

★ எக்காரணம் கொண்டும் அங்கப் பிரதிஷ்டை, காவடி ஊர்வலம் வெளி வீதியில் அனுமதிக்கப்படமாட்டாது.

★ சகல தினங்களிலும் புதிய நேரப்படி காலை 8மணி முதல் மாலை 4 மணி வரையில் சகல உற்சவங்களும் முடிவடையும்.

எச்சந்தர்ப்பத்திலும் மேற்படி ஏற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படமுடியாது—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றரை லீசல் லீற்றர் டீஸலிவயலுக்குள்பாய்ந்தது

சப்புகஸ்கந்தவில் சம்பவம்

கொழும்பு, ஓக. 18

சப்புகஸ்கந்த பெற்றோலிய சுத்திகரிப்பு ஆலையிலிருந்து சப்புகஸ்கந்த இலங்கை மின்சார சபையின் மின் நிலையத்திற்கு வழங்கப்பட்ட டீஸலில் தாங்கி நிறைந்து 3 லட்சத்து 39 ஆயிரம் லீற்றர் டீஸல் வயலுக்குள் வடிந்தோடிய சம்பவம் ஒன்று இடம்பெற்றிருக்கின்றது.

இதனால் இலங்கை மின்சார சபைக்கு சுமார் 33 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என ''லங்காதீப'' பத்திரிகை தெரிவிக்கிறது

இலங்கை மின்சார சபை 10 லட்சம் லீற்றர் டீஸலை வழங்குமாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே கட்டளை அனுப்பியிருந்தது. இதன்படி இலங்கை மின்சார சபையின் தாங்கியை நிரப்புவதற்கு குழாய் மூலம் டீஸலை அனுப்பும் பணி ஆரம்பமானது.

இவ்வாறு குழாய் மூலம் அனுப்பப்பட்ட டீஸல் இலங்கை மின்சார சபையின் சிறிய தாங்கியை நிறைத்த போதிலும் அதை எவரும் கவனிக்காத காரணத்தினால் சுமார் 3 லட்சத்து 39 ஆயிரம் லீற்றர் டீஸல் நிரம்பி வழிந்து அயலிலுள்ள வயல்களுக்குள் பாய்ந்தது என நேற்றைய ''லங்காதீப'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

(உ-10)

வெலிகந்தவில் 4 தமிழ் யுவதிகள் கைது

கொழும்பு, ஓக. 18

வெலிகந்த பொலீஸார் கடந்த புதன்கிழமை நான்கு தமிழ் யுவதிகளைக் கைது செய்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தின் பல இடங்களில் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் இவர்கள் பங்கு கொண்டிருந்ததாகவும்—

பொலன்னறுவைப் பொலீஸ் உயர் அதிகாரியின் தலைமையில் விசாரணைகள் நடைபெறுவதாகவும்— இலங்கை வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

கூட்டாட்சி மூலம் தீர்வுகாண வலியுறுத்து

சென்னை, ஓக. 18

''இலங்கையில் உண்மையான கூட்டாட்சி அமைப்பை ஏற்படுத்துவதுதான் இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரே வழி. இந்திய அரசு இதனை இலங்கைக்கு எடுத்துக் கூற வேண்டும்.''

ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சை அனுமதி அட்டை தபாலில்

அடுத்த மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகும் ஜி சி. ஈ (உயர் தர) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப்பட்டிருக்கின்றன.

பாடசாலை மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கும் —

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அவர்களின் வீடுகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஒரு லட்சத்து 71 ஆயிரத்து 831 பேர் விண்ணப்பித்திருக்கிறார்கள்.

பரீட்சைக்குத் தோற்றுவோரில் ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 682 பேர் பாடசாலை மாணவர்கள் ஆவர். (இ-4)

யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப விசேட ஏற்பாடுகள்

கொழும்பு, ஓக. 18

ஜி. சி. ஈ. (உயர்தர) பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகளை அனுப்ப விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் காமினி குணரத்தின தெரிவித்துள்ளார்.

அனுமதி அட்டையில் ஏதாவது மாற்றம் செய்ய விரும்பினால் பரீட்சார்த்திகள் உடனடியாகப் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர் கூறியதாக இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனம் தெரிவித்தது. (இ-4)

கடந்த ஒருவார காலத்தில்

84 லொறிகளே வடக்கே செல்ல அனுமதிக்கப்பட்டன

வவுனியா அரச அதிபர் தகவல்

கொழும்பு, ஓக. 18

கடந்த ஒருவார காலத்தில் 84 லொறிகள் வவுனியா சாந்தசோலையில் இருந்து தாண்டிக்குளம் ஊடாக வடக்கே செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளன என்று வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. கணேஷ் தெரிவித்துள்ளார்.

இந்த 84 லொறிகளில் 39 லொறிகள் முல்லைத்தீவுக்கும் —

30 லொறிகள் கிளிநொச்சிக்கும் —

15 லொறிகள் வவுனியாவுக்கு வடக்கேயும்-அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த லொறிகளில் பெரும்பாலும் மா, சீனி, அரிசி ஆகிய பொருள்களே எடுத்துச் செல்லப்படுவதாகவும் —

இடம் பெயர்ந்துள்ள ஆயிரக் கணக்கான மக்கள் வன்னி நோக்கி வந்திருப்பதால் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தேவை வழமையை

(6 ஆம் பக்கம் பார்க்க)

பயிர்களுக்கான அடி உரம் மற்றும் விதை நெல்லுக்கு பெரும் தட்டுப்பாடு

மழை பெய்தும் வயலை பண்படுத்த விவசாயிகள் தயக்கம்

யாழ். குடாநாட்டில் விதை நெல், நெல் பயிருக்கான அடி உரம் ஆகியவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

காலபோக நெற்செய்கையில் ஈடுபடுவதற்கென வயல் நிலங்களைப் பண்படுத்தும் நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

கடந்த சில தினங்களாக மழை பெய்து வருவதனால் விவசாயிகள் தமது நெல்வயல்களை பண்படுத்த ஆரம்பித்துள்ள போதிலும் விதைநெல், அடி உரம் இன்மையால் நெற் செய்கையை ஆரம்பிக்க முடியுமா என சந்தேகம் எழுப்பப்படுகிறது.

கடந்த வருடம் யாழ். குடாநாட்டில் போதிய மழையின்மையால் நெற்செய்கை முற்று முழுதாக பாதிக்கப்பட்டிருந்தது.

இதனால் விவசாயிகள் விதை நெல்லைச் சேமித்து வைக்க முடியாமற் போயிற்று

குடாநாட்டிலுள்ள கமநல சேவை நிலையங்கள் விதை நெல், அடி உரம் போன்ற வற்றை உரிய நேரத்தில் பெற்று விவசாயிகளுக்கு வழங்குமா என விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

(இ-173)

தேவை

காசாளர்/ இலிகிதர் தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். **18 - 8 - 96** ஞாயிறு காலை 9 மணிக்கு நேரில் வரவும்.

பட்டப்படிப்புகள்
கல்லூரி,
74, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

- நிர்வாகி

(42308)

AL 98

PURE./APP.
Mr. கருணா
CHEMISTRY
Mr. மகேஸ்வரன்
PHYSICS
Mr. ஸ்பெல்மன்

ஆரம்பம்: **21-8-96**
புதன் பி.ப. **3-00** மணி

SHAMROCK
(இடமாற்றம்)

யாழ்ப்பாணம்
ஈச்சமோட்டை வீதி.
(மறவகுளம் அருகில்)

(42320)

சாவகச்சேரி
நுணாவில் மேற்கு

விளைவேலி மருதடி ஆதீனம்
(மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்)

மகோற்சவப் பெருவிழா

19-08-96 திங்கள் பகல் 11 மணி – கொடியேற்றம்
26-08-96 திங்கள் மாலை 2மணி – வேட்டைத் திருவிழா
27-08-96 செவ்வாய் காலை 9மணி—தேர்த் திருவிழா
28-08-96 புதன் பகல் 10 மணி — தீர்த்தத்திருவிழா

மேற்படி விழா ஆதீன பிரதமகுரு
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்
தலைமையில் நிகழ்வுறும்.

அனைவரும்வருக! விநாயகர் அருள் பெறுக!!

"மருதடி விநாயகன் மலரடி தொழுதிடக்
கருதிய யாவும் கவின் பெற வருமே"

ஆலய பரிபாலன சபை

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

விளம்பர அன்பளிப்பு:
மருதடி விநாயகன் மலரடி வேண்டி நிற்கும்
வி. எம். கே. நகைமாளிகை
பிரதான சாலை, சாவகச்சேரி
(42314)

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ:து)
சுன்னாகம்.

வெற்றுச் சாக்கு, கழிவு சீனி விற்பனை அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் இருக்கும் வெற்றுச் சாக்குகள், கழிவு சீனி ஆகியன கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன. கேள்விப் பத்திரங்களைச் சங்க வேலை நாட்களில் பெற்று விண்ணப்பித்துக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் **27 - 08 - 96** வரை ஏற்றுக் கொள்ளப்படும். மீளளிப்பு வைப்புப் பணமாக ரூ. **100**/- செலுத்துதல் வேண்டும்.

பொது முகாமையாளர்.

சுன்னாகம் பல நோ: கூ. சங்கம்,
சுன்னாகம்.
16 - 08 - 96.
(C/2776)

ஜப்பானிய உதவியுடன்

கொழும்புத் துறைமுகம் ஆழமாக்கப்படுகின்றது

கொழும்பு, ஒக. 18

கொழும்புத் துறைமுகத்துக்குள் மிகப் பெரும் கப்பல்கள் பிரவேசிப்பதற்கு வசதியாக துறைமுகக் கடற் பகுதியின் சுற்றுப்புறங்களை ஆழமாக்கும் வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

ஜப்பானிய சர்வதேசப் பொருளாதார ஒத்துழைப்பு நிதியம் இதற்குத் தேவையான நிதி உதவிகளை வழங்குகிறது.

74 கோடி 40 இலட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப் பட்டுள்ள இந்தத் திட்டத்தின் கீழ் துறைமுக நுழைவாயிலில் உள்ள கடற் பகுதி மேலும் 12 மீற்றரிலிருந்து 15 மீற்றர் வரை ஆழமாக்கப்படும்.

இந்தத் திட்டம் பூர்த்தி அடைந்த பின்னர் ஒரே தடவையில் 3 ஆயிரத்து 200 கொள்கலன்களை ஏற்றிவரும் பாரிய கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தினுள் பிரவேசிக்கக் கூடியதாக இருக்கும்.

(இ-5)

கிரிக்கட்: ஆஸி அணி பங்குபற்றும்

கொழும்பு, ஒக. 18

இலங்கையில் இம் மாதம் நடக்கும் ஒரு நாள் சர்வதேச கிரிக்கட் போட்டிகளில் ஆஸ்திரேலிய அணி கலந்து கொள்ளும் என்று நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாக தெரிவிக்கப்பட்டது.

பொதுசன உதவிப்பணம்

வலிகாமம் தெற்கு ஒக. 18

வலிகாமம் வடக்கு- தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் கடந்த ஏப்ரல், மே, ஜூன் மாதங்களுக்கான பொதுசன மாதாந்த உதவிப் பணம் தற்போது வழங்கப் பட்டு வருகின்றது.

மேற்படி உதவிப் பணத்தை இதுவரை பெறாத்தவறியவர்கள் தாங்கள் தற்போது வசிக்கும் பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கிவரும் தபாலகங்கள், உபதபாலகங்கள் மூலம் அக் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச செயலர் திரு நா. வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ-152)

கூட்டுறவு கடை கியூ சண்டையில் மூவர் பலி!

சென்னை, ஒக. 18

கோயம்புத்தூர் புறநகர்ப் பகுதியில் ஆட்டுப்பாலம் என்ற இடத்தில் கூட்டுறவு கடை ஒன்றின் முன்பாக வரிசையில் நிற்பதில் ஏற்பட்ட சண்டையில் 3 பேர் கொல்லப்பட்டனர்.

பலத்த காயமடைந்த ஒருவர் சிகிச்சைக்காக அரச மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

தேவை

அப்பளம் தயாரிப்பதில் அனுபவம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. தங்குமிட வசதி உண்டு. கூலி, 1 கிலோவுக்கு ரூ. 15/- வழங்கப்படும்.

முன்னர் இந்த நிறுவனம் மல்லாகத்தில் இயங்கியது

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி;

R.S.M. இண்டஸ்ரீஸ்
பொற்பதி வீதி,
கோண்டாவில்
(42319)

மரண அறிவித்தல்கள்

முருகேசு பாலசுப்பிரமணியம்

(கணக்காளர், சீமாட்டி)

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மாப்பாணவூரியை வதிவிடமாகக் கொண்டவருமாகிய முருகேசு பாலசுப்பிரமணியம் 16 - 08 - 96 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற முருகேசு பார்வதியின் சிரேஷ்ட புத்திரனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், விஜயரூபி, காந்தரூபி, சண்முகரூபன், பாலரூபி, யோகரூபி, சிவரூபி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16 - 08 - 96 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

மாப்பாணவூரி,
காரைநகர்.
(42318)

பஞ்சாட்சரம் மதியழகன்

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் சிலகாலம் சென்னையை வசிப்பிடமாகவும் கொண்ட திருநீலகண்டர் பஞ்சாட்சரம் மதியழகன் 26- 07- 96 ஆம் திகதி சென்னையில் காலமானார்.

அன்னார் பஞ்சாட்சரம்—பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், விஜயகுமாரியின் அருமைக் கணவரும், காலஞ்சென்ற சதானந்தன்—கமலலோசனி தம்பதிகளின் மருமகனும், சாரதாதேவி, கோவைச் செல்வன், கதிர்ச்செல்வன், சிவபாலன், இளவழகன் (கனடா), இளஞ்செழியன் (ஜேர்மனி), முருகபூபதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகாலிங்கம், உமாதேவி, சுபத்திராவதி, யோகராணி, ரூபி, விக்கினேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26- 07- 96 ஆம் திகதி சென்னையில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவபாலன் (சகோதரன்),

பிள்ளையார் கோயிலடி,
இணுவில் கிழக்கு.
(42306)

சுருதி

தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலயத்தில்

எதிர் வரும் 21 ஆம் திகதி புதன் கிழமை மகாகும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. காலை 9 மணி தொடக்கம் 9 45 வரையுள்ள சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் இடம் பெறும். (அ-30)

★ ★ ★

சாவகச்சேரி நுணாவில் மேற்கு, விளைவேலி மருதடி விநாயகர் ஆலய வருடாந்த

மகோற்சவம் நாளை 19 ஆம் திகதி மு. ப. 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம் மாதம் 27 ஆம் திகதி தேர்த்திருவிழா நடைபெறும். (அ- 30- 31)

★ ★ ★

சரித்திரப் பிரசித்தி பெற்ற பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயவருடாந்த

மகோற்சவம் நாளை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது செப்ரெம்பர் 4 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், அடுத்த நாள் தீர்த்தமும் நடைபெறும். (அ-30)

★ ★ ★

ஈவினை மத்தி கற்பக விநாயகர் வருடாந்த மகோற்சவம்

இன்று காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம்மாதம் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த் திருவிழா நடைபெறும். (அ)

★ ★ ★

கோண்டாவில் குமரகோட்டம் சித்திர வைரவர் — அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம்

இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறும் விசேட பூசையுடன் ஆரம்பமாகிறது.

இம்மாதம் 26 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 28 ஆம் திகதி வீரபத்திரர் திருவிழாவும் நடைபெறும். (அ)

★ ★ ★

வட்டுக்கோட்டை, அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்த சுவாமி கோயில் வருடாந்த

மகோற்சவம் நாளை மு. ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம்மாதம் 23 ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும், 26 ஆம் திகதி சப்பறமும், 27 ஆம் திகதி மு. ப. 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் நடைபெறும். (அ)

★ ★ ★

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த

மகோற்சவம் நாளை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

தேர்த்திருவிழா 27 ஆம் திகதியும், தீர்த்தத் திருவிழா 28 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன. (அ-31)

★ ★ ★

தொண்டமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு —

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் தெய்வீகக்கலை நிகழ்ச்சிகள் தொடரில் —

இன்று ஞாயிற்றுக் கிழமை பண்ணிசை மணி டி. எம். வேதாரணியம், சி. நவரத்தினம் ஆகியோரின்இன்னிசை இடம்பெறும். (அ-4)

இந்தியாவின் புதிய மாநிலமாக உத்தரகண்ட் விரைவில் உருவாகும்

நாடாளுமன்றில் சட்டமூலம் வரும்

புதுடில்லி, ஒக. 18

புதிய மாநிலமாக ''உத்தரகண்ட்'' மாநிலத்தை அமைப்பதற்கான சட்ட வரைவை தயாரிக்கும் பணியை இந்திய மத்திய உள்துறை அமைச்சு ஆரம்பித்துள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் உள்ள கடுவான், கிமோன் பகுதிகளைச் சேர்ந்த ஒன்பது மாவட்டங்களை உள்ளடக்கியதாக இந்த புதிய மாநிலம் அமையும்.

சில அரசியல் சாசன நடைமுறைகள் செய்து முடிக்கப்பட்டதும், கூடிய விரைவில் ''உத்தரகண்ட்'' மாநிலம் அமைக்கும் தனது முடிவை அரசு நிறைவேற்றும் என்று புதுடில்லியில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசியல் சாசன நடவடிக்கைகள் பற்றி விளக்கிய அந்த அதிகாரி, ஜனாதிபதியின் அங்கீகாரம் பெறும் இந்த சட்ட முன் வரைவு குறிப்பிட்ட காலத்துக்கு சட்டப் பேரவைகளின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கு அனுப்பப்படவேண்டும் என்று சொன்னார்.

இந்த மாநிலம் அமைக்கும் பிரதமர் தேவகௌடாவின் அறிவிப்பை பல அரசியல் கட்சிகள் வரவேற்றுள்ளன.

ஆனால் இந்த விஷயம் குறித்து விவாதிக்க அனைத்துக்கட்சிக் கூட்டத்தை அழைக்குமாறு காங்கிரஸ் கட்சி கேட்டுள்ளது.

''உத்தரகண்ட்'' மாநிலத்துக்கு யூனியன் பிரதேச அந்தஸ்தை வழங்குவது என்ற தமது கட்சியின் நிலைப் பாட்டை காங்கிரஸ் கட்சியின் பிரமுகர் கல்மாடி மீண்டும் வலியுறுத்தி உள்ளார். (இ-3)

முஜிபுர் நினைவாக பங்களாதேஷில் துக்கம்

கொடிகள் அரைக் கம்பத்தில்

டாக்கா, ஒக. 18

21 ஆண்டுகளுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்ட ''வங்கச் சிங்கம்'' முஜிபுர் ரஹ்மானுக்கும்அவரதுகுடும்ப அங்கத்தவர்களுக்கும் அனுதாபம் தெரிவிக்குமுகமாக கடந்த 15 ஆம் திகதி பங்களாதேஷில் பொதுமக்கள் துக்கம் அனுஷ்டித்தனர்.

படுகொலை செய்யப்பட்ட முஜிபுர் ரஹ்மானின் மகளான தற்போதைய பங்களாதேஷ்பிரதமர் ஷேக்ஹசீனா சமய நிகழ்ச்சிகளிலும், ஏழைகளுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார்.

பங்களாதேஷ் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டது.

முஜிபுர் ரஹ்மான் மறைவு தினம் முதன் முறையாக தேசிய துக்கதினமாக பங்களாதேஷில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. தேசிய விடுமுறையாகவும் அத்தினம் அறிவிக்கப்பட்டிருந்தது —

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தனது தந்தை, தாய், சகோதரர்கள் என பதினைந்து பேர் 1975 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 15 ஆம் நாள் படுகொலை செய்யப்பட்ட வீட்டுக்குச் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

இந்தியப் பிரதமர் தேவகௌடா, தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா, சீனப்பிரதமர் லீப்பெங் ஆகியோர் இரங்கல் செய்தி அனுப்பியிருந்தார்கள்.

ஐந்து நாள்களுக்கு முன்பு தான் இப்படுகொலையை திட்டமிட்டு நிறைவேற்றிய மூன்று இராணுவத் தளபதிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். (இ-5-10)

உலக அரங்கில்

நாகாலாந்தில் தாக்குதல்

புதுடில்லி, ஒக. 18

நாகாலாந்து மாநிலத்தில் உள்ள கோகிமா மாவட்டத்தில் தலைமறைவாகத் தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்கியதில் ஓர் இராணுவ அதிகாரி கொல்லப்பட்டார். மற்றும் வேறு இருவர் காயமடைந்தனர்.

சுதந்திர வைபவத்தில் கலந்து கொண்டுவிட்டு இராணுவத்தினர் தங்கள் இருப்பிடத்துக்கு திரும்பிக் கொண்டிருந்த போது இந்தத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது.

மேஜர் ரவிக்குமார் என்ற இராணுவ அதிகாரி அதே இடத்தில் இறந்து போனார். அவரின் மனைவியும் குழந்தையும் இத்தாக்குதலில் காயமடைந்தனர்.

இராணுவத்தினர் திருப்பிச் சுட்டத்தில் துப்பாக்கிச் சூட்டுக்குள் அகப்பட்டு நான்கு சிவிலியன்கள் இறந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

நிலக்கரி இறக்குமதி ஊழல்: விசாரிக்கச் சிறப்புக் குழு

சென்னை, ஒக. 18

முன்னாள் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த சமயம் மாநில மின்சார வாரியம் நிலக்கரியை இறக்குமதி செய்ததில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் ஊழல் குறித்து விசாரிக்க சிறப்புக்குழு ஒன்றை அமைக்குமாறு மாநில காவல் துறைத் தலைவருக்கு சென்னை நீதிமன்றம் ஒன்று ஆணையிட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையில் விசாரணைக்கு வாய்ப்பு இருக்கிறது என்றும் முதன்மை செஷன் நீதிபதியும், லஞ்சத் தடுப்பு சட்டத்தின் கீழ் பணியாற்றும் சிறப்பு நீதிபதியுமான ஏ. ராமமூர்த்தி தெரிவித்தார்.

இந்தவிடயம் தொடர்பாக ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தாக்கல் செய்திருந்த முறைப்பாட்டையடுத்து நீதிபதி இவ்வாறு உத்தரவிட்டார்.

இருமாதங்களுக்குள் குழு அறிக்கையை சமர்பிக்க வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

சி. பி. ஐ. விசாரணை தேவைப்படும் என மாநில காவல்துறை பொறுப்பாளர் கருதினால் தகுந்த ஆணை பிறப்பிக்குமாறு மாநில அரசை அவர் கேட்டுக் கொள்ளலாம் என நீதிபதி மேலும் தெரிவித்தார். (இ-5)

முன்னாள் அமைச்சரின் வீட்டில் ரூ.3 கோடி!

சி. பி. ஐ. கைப்பற்றியது

புதுடில்லி, ஒக. 18

முன்னாள் மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் சுக்ராம் வீட்டில் சி. பி. ஐ. நேற்று முன்தினம் சோதனை செய்து சுமார் 3 கோடி ரூபா ரொக்கப்பணத்தை கைப்பற்றியது.

ஒருகோடி 68 லட்சம் ரூபா பெறுமதிக்கு தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சலுகை காட்டியமை தொடர்பான ஆவணங்களையும், நகைகளையும் சி. பி. ஐ. கைப்பற்றியது.

ஹிமாலயப் பிரதேசத்தின் மண்டியிலும், புதுடில்லியிலும் உள்ள சுக்ராமின் வீடுகளில் சோதனை செய்யப்பட்டது.

மருத்துவ பரிசோதனைக்காக சுக்ராம் வெளிநாடு சென்றுள்ளார் என்று சி.பி.ஐ. இயக்குனர் ஜோகிந்தர்சிவ் தெரிவித்தார்.

தகவல் தொடர்பு அமைச்சகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரியான திருமதி ரேணு கோஸீம் அலுவலகத்திலும், வீட்டிலும் சி.பி.ஐ.சோதனை நடத்தி சுமார் ஒருலட்சத்து 35 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும், ஒருலட்சம் ரூபா பெறுமதியான வெளி நாட்டுப்பணம், விலையுயர்ந்த நகைகள் ஆகியவற்றையும் கைப்பற்றியுள்ளது.

ஹைதராபாத்தில் உள்ள ''அட்வான்ஸ் றேடியோ மாஸ்'' என்ற தனியார் நிறுவன அலுவலகத்திலும் சி.பி.ஐ. சோதனை நடத்தியது.

முன்னாள் அமைச்சர் சுக்ராமும்,உயர் அதிகாரி திருமதி ரேணு கோஸீமும் அந்த நிறுவனத்திடம் இருந்து அளவுக்கதிகமான விலையில் சில சாதனங்களை வாங்குவதற்கு திட்டமிட்டார்கள் என்று கிரிமினல் வழக்கு பதிவாகியுள்ளது. (இ-3)

அஸாம் மாநில ஆறு ஒன்றில்

பல்லாயிரக் கணக்கான எலிகள் செத்துமிதக்கின்றன

குவாஹாத்தி, ஒக. 18

பல்லாயிரக் கணக்கான எலிகள் ஓர் ஆற்றில் செத்து மிதப்பதையடுத்து அந்த ஆற்றில் மீன்பிடிப்பதையும், தண்ணீர் எடுப்பதையும் அப்பகுதி மக்கள் நிறுத்தியுள்ளனர்.

இந்தியாவின் வடக்கு மாநிலமான அஸாமில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து அப்பகுதியில் வாழும் முதியவர்கள், இது சமீபத்தில் அங்கு நிகழப்போகும் பூகம்பத்தின் அறிகுறியென்று தெரிவித்துள்ளனர்.

1950ஆம் ஆண்டு இப்படி எலிகள் செத்து மிதந்த சம்பவத்தின் பின் பூகம்பம் நிகழ்ந்து அழிவை ஏற்படுத்தியிருந்தது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சமீபத்தில் இடம்பெற்ற பெரும் வெள்ளப் பெருக்கும் எலிகள் இறப்பதற்கு காரணமாக இருக்கலாம் என்று மற்றொரு சாரார் கருத்துத் தெரிவித்தனர். (இ-3)

கிருஷ்ணா நதி விவகாரம்:

தெலுங்குதேசக் கட்சி ஆதரவை விலக்குமா?

கிருஷ்ணா நதியில் அலமாட்டியாவில் அணைகட்டும் விவகாரத்தில் ஆந்திரப்பிரதேசத்தின் நலன்கள் பாதிக்கப்படுமாயின் ஐக்கிய முன்னணி அரசுக்கு தெலுங்கு தேசக்கட்சி அளித்து வரும் ஆதரவை மறுபரிசிலனை செய்ய வேண்டியிருக்கும்.

இப்படி ஆந்திரப் பிரதேச போசனத்துறை அமைச்சர் க.சிவப்பிரகாச ராவ் நேற்று தெரிவித்தார்.

இதே வேளை —

இந்த தகராறுக்கு அரசியல் நிலையில் பேச்சு நடத்தி தீர்வு காண்பதற்கு மத்திய அரசுக்கு ஆந்திரப்பிரதேச உயர் நீதிமன்றம் உரிமை வழங்கியுள்ளது.

பிரச்சினைக்கு தீர்வு காண கட்டுப்பாடு எதனையும் விதிக்க விரும்பவில்லை என்று அந்தநீதிமன்றம்தெரிவித்தது

அமைய அடிப்படையிலான சிற்றூழியர் நியமனம்

விரைவில் இடம்பெறும்

கொழும்பு, ஒக. 18

வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சினால் அமைய அடிப்படையிலான சிற்றூழியர் நியமனம் இன்னும் மூன்று வாரங்களில் வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சின் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தெரிவித்தார்.

மேற்படி நியமனங்களை வழங்குவதற்கு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டபோதும், இன்னும் நியமனங்கள் வழங்கப்படவில்லை என்பதை மட்டக்களப்பு மாவட்ட எம். பி. அ. இராசமாணிக்கம் செயலாளரின் கவனத்துக்கு கொண்டு வந்தார். அப்போதே செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்களில் கணிசமானோர் முன்னர் தற்காலிக நியமனம் பெற்று இடைநிறுத்தப்பட்டவர்கள் என்றும் —

ஏற்கனவே பாடசாலைகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை அளித்து நியமனம் வழங்கவேண்டும் என்றும் — செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. (இ-3)

தமிழ்த்தினவிழா

வலிகாமம் தெற்கு, ஒக. 18

சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளின் தமிழ்த்தினவிழா நாளை 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும்—

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் தமிழ்த்தினவிழா 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை உடுவில் இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறும். (இ-152)

அதிகாரப் பரவலாக்கல் யோசனை: இறுதி முடிவு எடுக்கும் கட்டத்தில்

கொழும்பு, ஒக. 17

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளை தீர்க்கமாக ஆராய்ந்து இறுதி முடிவு எடுக்கும் கட்டத்தை அரச தரப்பினர் ஆரம்பித்திருப்பதாகத் தெரியவருகிறது.

நவம்பரில் அரசின் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. அதன் பின்னர் வரவு செலவுத்திட்ட விவாதம் என்று காலம் செல்லும்.

அதற்கு முன்பதாக அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் பற்றி தீர்க்கமான முடிவு ஒன்றை அரசாங்கம் செப்டம்பர் மாதத்துக்கு முன் எடுக்கலாம்.

இவ்வாறு கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு இம்மாதமும் கூடி அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளை விவாதிக்கவிருக்கிறது. அதனையடுத்து பெரும்பாலும் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் பற்றிய இறுதி முடிவை எடுக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

வெங்காயம், புகையிலை வாதுவவில் கொழும்புக்கு

வடமராட்சி, ஒக. 18

வெங்காயம், புகையிலை ஆகிய குடாநாட்டு விளைபொருள்கள் வாதுவ கப்பலில் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன.

தற்போது பருத்தித்துறை முகத்தில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் வாதுவ கப்பல், பொருள்களை இறக்கி முடித்ததும் வெங்காயம், புகையிலை ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு கொழும்புக்கு புறப்படும்.

இதற்காக வல்வெட்டித் துறை, நெற்கொழு விவசாயிகள் சங்கமும், புலோலி மேற்கு விவசாயிகள் சங்கமும் அந்தர் ஆயிரத்து 200 ரூபா வீதம் விவசாயிகளிடமிருந்து வெங்காயத்தைக்கொள்வனவு செய்து வருகின்றன.

முதற்கட்டமாக பருத்தித்துறை முகத்திலிருந்து இப்பொருள்களை ஏற்றிச் செல்லும் இக்கப்பலில், சந்தைப்படுத்துவதற்கென விவசாய சங்கப் பிரதிநிதிகளும், தனியார் வர்த்தகர்களும் செல்லவுள்ளனர். (இ-173)

சின்னஞ்சிறு விளம்பரம்

தேவை

நல்ல தரமான வேப்பம் விதை வைத்திருப்பவர்கள் எமது மில்லில் கொடுத்து நியாயமான விலையினைப் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: மல்ரி–ஓயில் மில், K. K. S. வீதி, இணுவில். (42266)

உப உணவுப் பொருள்கள் தயாரிப்பதற்கு Temperature Meter, Brik Meter உடன் தேவைப்படுகின்றன. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: டாக்டர் பத்மநாதன், பழங்கிணற்றடி பிள்ளையார் கோவிலடி, கலாசாலை வீதி, திருநெல்வேலி. (42278)

நல்ல நிலையில் உள்ள ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் (Standard) தேவை. தொடர்பு: செயலாளர், வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம், வதிரி, கரவெட்டி. (42261)

வைத்தியம்

செங்கண்மானி, அல்சர், ஆஸ்மா, வாதநோய்கள், மாதவிடாய்குத்து, வலிப்பு, சரும நோய்கள், மூல மூத்திர ரோகங்களில் பிரபல மானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [42111]

விற்பனைக்கு

வீட்டுடன் கூடிய 3 பரப்பு காணி மீசாலையில் புத்தூர் சந்திக்கு அண்மையில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மணியம்ஸ்ரோர்ஸ் சாவகச்சேரி. (சி–2773)

தேங்காய்ச் சிரட்டையும், சிரட்டைக் கரியும் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: மல்ரி–ஓயில் மில், K. K. S. வீதி, இணுவில். (42267)

கவரிடுதல்

அடையாள அட்டை, பாடசாலை அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை உட்பட சகல அடையாள அட்டைகளையும் வேண்டிய அளவுகளில் கவரிட்டு பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்: கிளீன் கட், யாழ்ப்பாணம். (42246)

மீண்டும் ஆரம்பம்

குழந்தைகள், முதியவர்கள் அனைவருக்கும் சிறந்த சிகிச்சையளிக்கின்ற இல. 129, ஸ்ரேஷன் றோட் இரெட்ணம் வைத்தியசாலை யாழ்ப்பாணத்தில் தனது பழைய இடத்திலேயே சேவையைத் தொடர்கிறது என்பதை அறியத் தருகிறோம்: (42236)

வாசகர்களுக்கு

தென்மராட்சியில் தரமான பல்வேறு விதமான தமிழ்–ஆங்கில நூல்களைக் குறைந்த கட்டணத்தில் இரவல் பெற்று வாசிக்க விஜயம் செய்யுங்கள்: லிங்க் லெண்டிங் லைப்ரறி, Ling Lending Library, இல. 41, தபாலக வீதி, சாவகச்சேரி. (42251)

காணிகள் விற்பனைக்கு

மல்லாகம் ஏழாங்கட்டை ஒழுங்கையில், வீட்டுடன் சேர்ந்த 18½ பரப்பும் வேறொரு 6½ பரப்பும் மல்லாகம் முகாந்திரம் ஒழுங்கையில் உள்ள ஐந்து பரப்பு, காணியும், விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டியவர்: சு. ஸ்ரீபாஸ்கரன் ஏழாங்கட்டை ஒழுங்கை, மல்லாகம். (42235)

பாலர் ஆசிரியர்

பாலர் ஆசிரியர் பயிற்சி தபால் வழியில் நடைபெறுகிறது. க.பொ.த. (சா.த.) கடைசித் தகைமையாகும். உடன் விண்ணப்பிக்குக. பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா. திரு. வீ. கே. கந்தசாமி, "பழமுதிர்சோலை", 20, அச்சக ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (42277)

மாதாந்தப் பரீட்சை

ஆண்டு 3 இலிருந்து O/L வரை சகல பாடங்களுக்கான மாதாந்தப் பரீட்சை வினாத்தாள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு- புதிய நாவலர் கல்வி நிலையம் நாவலர் வீதி, (இலுப்பையடிச் சந்தியருகில்) யாழ்ப்பாணம். (42281)

தொடர்பு கொள்ளவும்

கொழும்பு செல்வதற்கான பயண ஒழுங்குகள் சம்பந்தமாக கையொப்பமிடாத பல்கலைக்கழக திறந்த பல்கலைக்கழக மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். முகவரி: மாற்றம், த. பெ. இல. 133, யாழ்ப்பாணம். (42250)

பிரத்தியேக வகுப்பு

பொருளியல், வணிகப் புள்ளிவிவரவியல் A/L 97,98, கணிதம் O/L ஆகிய பாடங்கள் அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் மாணவர்களின் நலன் கருதி தனியாகவும், குழுக்களாகவும் கற்பிக்கப்படுகின்றது. தொடர்பு இல: 122 சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி தெற்கு, அல்லது இல. 750, பலாலி வீதி, திருநெல்வேலி. (42294)

புலமைப் பரிசில் '96

புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். அடுத்த 10 ஆவது பரீட்சை 18-8-96 ஞாயிறு காலை 9 மணி. புதிய நாவலர் கல்வி நிலையம், நாவலர்வீதி, (இலுப்பையடிச் சந்தியருகில்) யாழ்ப்பாணம். (42282)

விற்பனையாகிறது

ஆசிரியர் திரு. கந்தையா ஸ்ரீ கந்தவேள் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள நாடகமும் அரங்கியலும் பாடத்திற்குரிய 250 குறுவினா விடைத் தொகுப்பு பூபாலசிங்கம் புத்தகசாலையில் விற்பனையாகிறது. (42287)

தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் (பல இனங்கள்) விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விஷேட கழிவு உண்டு. மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டி வீதி, மீசாலை (42285)

தவறிவிட்டது

14-08-96 அன்று இரவு 7.30 மணிக்கு குணசேகரம் தங்கராஜா இலுப்பைக்குளம் சாம்பல்தீவு என்ற விலாசமுடைய எனது அடையாள அட்டை கே.கே.எஸ் றோட் கொக்குவிலுக்கும், இணுவில் கந்தசாமி கோவிலுக்குமிடையில் தவறி விட்டது. எடுத்தவர்கள் கொக்குவில் சந்தியிலுள்ள ஈசன் புத்தகக் கடையில் ஒப்படைக்கவும். (42298)

கோயில்

கோயில் வழிபாடுகளில் சமய ஆசார சீலராக கலந்து கொள்க. இந்து இளைஞர் பேரவை, யாழ்ப்பாண மாவட்டம். (42304)

மாதிரி வினாத்தாள்

சாவகச்சேரி சங்கத்தானையப்பிட்டர் பொத்தகசாலையில் சகல பாடங்களுக்குமான இரண்டாம் தவணை மாதிரி வினாத்தாள்கள் சகல ஆண்டுகளுக்கும் விற்பனையாகிறது. பிரதிகள் சொற்பமே. முந்துங்கள். (சி–2768)

கண்டெடுக்கப்பட்டது

ஆனைக்கோட்டை மரியாம்பிள்ளை ஞானராசன் 730532946 V, தெல்லிப்பளை கனகலிங்கம் அமிர்தலிங்கம் 680924198 V எனும் அடையாள அட்டைகளை "மனோகரன் கல்வி நிலையம்", இருபாலை வீதி, கோண்டாவிலில் பெற்றுக் கொள்ளவும். (42297)

ஓகஸ்ட் மாத ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் ஓகஸ்ட் மாதத்துக்குரிய வவுச்சர்கள் இன்று காங்கேசன்துறைக்கு வரும் 'மாஹோ' கப்பலில் எடுத்து வரப்படுவதாக யாழ். அரச அதிபர் கொழும்பில் இருந்து செயலகத்துக்கு தகவல் அனுப்பியுள்ளார்.

அத்துடன் உலர் உணவு நிவாரண முத்திரை, உணவு முத்திரை, தாய்மார்களுக்கான முத்திரை ஆகியனவும் எடுத்துவரப்படுவதாக தகவல் கிடைத்துள்ளது. (இ–3-5)

வடமராட்சியில் இரு நகரங்களில்

A\L 97, 98

தூய கணிதம், பிரயோக கணிதம்

ஆசிரியர்: திரு. அருளானந்தம்

★ ★ ★

நெல்லியடியில்:

நியூ சயன்ஸ் அக்கடமி

பருத்தித்துறையில்:

N.C.A. கல்வி நிறுவனம்

ஆரம்பம்: 25 – 8 – 96

[C/2774]

சுத்தமான தேங்காய் எண்ணெய்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (பாம் ஒயில் கலப்பற்றது) பாவித்து பார்த்தால் உண்மை விளங்கும்.

மல்ரி ஓயில் மில்
கே. கே. எஸ். றோட்,
இணுவில்.

(42268)

ST. JOHN'S COLLEGE, JAFFNA
CHUNDIKULI GIRLS' COLLEGE
JAFFNA

ADMISSION - 1997

01. பின்வரும் வகுப்புகளில் வெற்றிடங்கள் உள்ளன. ஆண்டு 1, ஆண்டு 6.

02. (அ) விண்ணப்பப்படிவங்களை அவ்வக் கல்லூரிகளிலிருந்து 02-09-1996 முதல் 14-09-1996 வரை பெற்றுக் கொள்ளலாம்.

(ஆ) எக்காரணம் கொண்டும் 14-09-1996-க்குப் பின் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படா.

(இ) எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

(ஈ) விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 21-09-1996 அத்திகதிக்குப் பின் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.

03. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

04. ஆண்டு ஒன்றுக்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோ ஸ்ரற் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.

05. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை அவ்வக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

06. ஆண்டு ஒன்றுக்கான படிவத்திற்கு ரூபா 150/- ஆண்டு ஆறுக்கான படிவத்திற்கு ரூபா 200/- செலுத்த வேண்டும்.

07. வயதெல்லைகள்:
(அ) ஆண்டு ஒன்று - விண்ணப்பதாரி 01-02-91க்கும் 31-01-92க்கும் இடையில் பிறந்திருக்க வேண்டும்.
ஆண்டு ஆறு - விண்ணப்பதாரி 01-02-86இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.

08. பிரவேசப் பரீட்சை: ஆண்டு ஆறு வகுப்புக்கு 19-10-1996 காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

09. ஏனைய வகுப்புகளுக்கான விண்ணப்பங்களும் பிரத்தியேகப் படிவங்களில் இதே நாள்களில் ஏற்றுக் கொள்ளப்படும். பரீட்சை மார்கழியில் நடத்தப்படும். விவரங்கள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

10. ஆண்டு 4 முதல் ஆண்டு 12 வரையிலான பரி. யோவான் கல்லூரி மாணவருக்கு இவ்வாண்டு 3 ஆம் தவணையிலிருந்து விடுதி வசதிகள் உள.
விண்ணப்பங்கள் 25 - 09 - 96 வரை ஏற்கப்படும்.

அதிபர்கள்.

(சி–2719)

மானிப்பாய் கோவில்பற்று
பல நோ. கூ. சங்கம்

வெற்றுச் சாக்கு விற்பனைக்கான

கேள்வி கோரல்

தரம் பிரிக்கப்பட்ட 5105 வெற்றுச்சாக்குகளும், 8865 வெற்றுப்பைகளும் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படும். அவற்றைப் பெற விரும்புபவர்கள் மீளளிப்பு வைப்புப்பணமாக ரூபா. 200/- சங்கத்தில் செலுத்தி விண்ணப்பப்பத்திரத்தைப் பெற்று 27-8-96 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்களை கடித உறையில் இட்டு ஒட்டி சங்கத்தில் இதற்கென உள்ள பெட்டியில் சேர்ப்பிக்கலாம். அல்லது பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்.

(சி/7027)

மானிப்பாய் கோவில்பற்று
பல நோ. கூ. சங்கம்

காணவில்லை

சங்கத்திற்குரிய 73 ஸ்ரீ 1350 (தர 1 - 8666) இலக்க முடைய சிறிய உழவுயந்திரம் பெட்டியுடன் (லாண்ட் மாஸ்ரர்) 20 - 04 - 96 இல் களவாடப்பட்டுள்ளது. இதைக் கண்டுபிடித்து அல்லது இது பற்றிய விவரம் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். லாண்ட்மாஸ்ரர் பற்றிய மேலதிக விவரங்கள்:-

அடிச்சட்ட (தள) இலக்கம் (Chassis No) 87113
இயந்திர இலக்கம் (Engine No) 622933
பெட்டியின் அடிச்சட்ட இலக்கம் 030223051

தலைவர். பொது முகாமையாளர்,

(சி–2769)

உதயன்

தமிழில் கையொப்பம்

தமிழகத்தில் அமைச்சர்கள் முதல் அதிகாரிகள் வரை அனைவரும் தமிழிலேயே கையெழுத்திட வேண்டும்— இவ்வாறு தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி பணிப்புரை விடுத்திருக்கிறார்.

அவ்வாறுசெய்யவில்லையெனில், அது, அரச ஆணையை மீறிய குற்றமாகக் கருதப்படும் என்றும் அவர் எச்சரித்திருக்கிறார். அதாவது ஆட்சி, அதிகார சார்புடையோர் தமிழில் கையொப்பம் இடாவிடில் தண்டிக்கப்படுவர் என்பதனை மறைமுகமாகத் தெரிவித்திருக்கிறார்.

தமிழகத்தின் மாநில மொழி தமிழ்; தொடர்பு மொழி ஆங்கிலம். அது போலவே கீழ் வகுப்புகளில் போதனா மொழி தமிழாகவும், மேல் வகுப்புகளில் போதனாமொழி ஆங்கிலமாகவும் உள்ளன.

மேலும் தமிழகத்தில் வசதி படைத்த படித்த, மற்றும் நடுத்தர மக்கள் தமிழ் பேசும் போது ஆங்கிலச் சொற்களை அடிக்கடி பேசுகிறார்கள். ஐந்து சொல் வசனத்தில் மூன்று சொற்கள் ஆங்கிலமாக இருப்பதை அவதானிக்கலாம்!

இத்தகைய ஒரு சூழ்நிலையில் தமிழில் கையொப்பம் என்ற கருணாநிதியின் திட்டம் எந்தளவுக்கு வெற்றி பெறும் என்பது கேள்விக்குரிய ஒன்று.

கையொப்பத்தை எந்த மொழியில் வைப்பது என்று முடிவு செய்து அதனை நடைமுறைப்படுத்துவது ஒருவரின் சொந்த விருப்பத்துக்கு உரியது. அது அவருடைய தனிப்பட்ட சுதந்திரமும் ஆகும்.

ஆனால் ஏனைய மொழி பேசும் இனங்கள், மக்கள் தத்தமது சொந்த மொழியில் தமது கையொப்பத்தை இடுவதையே விரும்புகின்றனர். அந்தளவுக்கு அவர்களிடம் மொழிப்பற்று ஊறியிருக்கிறது. தமது தாய்மொழியில் கையொப்பம் இடுவதை பெருமையாகக் கருதுகிறார்கள்.

அத்தகைய மொழிப்பற்றுத் தமிழர்களிடம் செயலளவில் உண்டோ என்றால், பதில் எதிர்மறை தான். ஆங்கிலத்தில் கையொப்பம் இடுவதை நாகரிகமாகவும், அவ்வாறு செய்வதால் தாம் அந்தஸ்தில் உயர்ந்தவர்களாகி விடுவதாகவும் நம்மில் பலரும் நினைக்கிறார்கள். ஆங்கிலத்தில் ஒரு வசனம் வழுவின்றி எழுத முடியாதவர்களும் அந்த மொழியில் கையொப்பம் இடுவதற்கே பெரிதும் விரும்புகிறார்கள்.

ஈழத்தைப் பொறுத்தவரையில், தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு வித்திட்டது மொழிப் பிரச்சினை தான். தமிழுக்கு உத்தியோக மொழி, சம அந்தஸ்து வழங்க வேண்டும் என்று போராட்டம் நடத்தியிருந்தும், தமது கையொப்பத்தை தமிழில் இட வேண்டும் என்ற மனவிருப்பு, மனஉணர்வு மக்களிடம் குறைவாகவே காணப்படுகிறது.

இலங்கையின் உத்தியோக மொழிகளில் ஒன்று என்ற அந்தஸ்து இப்போது தமிழுக்கு உண்டு. பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை தமிழ்போதனா மொழியாக உள்ளது.

எனினும் தமது சொந்த மொழியில் கையொப்பம் இடுமளவுக்கு மொழிப்பற்று வளரவில்லை என்பது கவலைக்குரியது. எவரது வற்புறுத்தலோ, சட்ட நிர்ப்பந்தமோ இல்லாமல் தாய் மொழி தமிழில் கையொப்பமிட வேண்டும் என்ற உணர்வும் பற்றும் எம்மிடையே வளர்வதாக.

6 ஆண்டுகாலம் ஆள்வதற்கு மக்கள் எமக்கு ஆணை கொடுத்துள்ளனர்

அதுவரை பதவிவகிப்போம் என்கிறார் சந்திரிகா

கொழும்பு, ஒக. 18

மக்கள் இந்த அரசுக்கு ஆறு ஆண்டுகால ஆணையை வழங்கியிருக்கிறார்கள். அது வரையில் அது தொடர்ந்து பதவியிலிருக்கும்.

குருநாகலில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆறு ஆண்டுகால ஆட்சியின் பின்னரே இந்த அரசு தேர்தலை எதிர்நோக்கும். அரசாங்கம் ஒரு சில மாதங்களுக்குள் கவிழ்ந்துவிடும் என எதிர்க்கட்சிகள் கூறிவருகின்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் உள்ள கட்சிகள் பல மானவை— அவை ஐக்கியப்பட்டுள்ளன. இதனால் தான் எதிர்க்கட்சியின் நோக்கம் பகற்கனவாகிவிட்டது.

மக்கள் தாம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைக்கு தீர்வு காணும் நம்பிக்கையில்பொது மக்கள் ஐக்கிய முன்னணியை இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆட்சியில் அமர்த்தினார்கள்.

இந்த நோக்கங்களை அடைவதற்கு அரசாங்கம் பல யுத்தங்களை நடத்த வேண்டியிருந்தது.

மக்கள் சுதந்திரத்தை அனுபவிக்காத ஒரு யுகம் இனியும் ஏற்படக்கூடாது.

—இப்படி ஜனாதிபதி மேலும் கூறினார்.

இந்த உரையின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளிவந்தது. (இ-5)

அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 18

சட்டத்தரணியும், சமாதான நீதிவானுமான சிவக் கொழுந்து இராஜேந்திரனின் மறைவு குறித்த அஞ்சலிக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியின் மஸ்கன் மண்டபத்தில் நடைபெறும். (இ)

ஜி.சி.ஈ. வகுப்புகளில் உடற்கல்வி

1998ஆம் ஆண்டில் இருந்து ஜி.சி.ஈ[சாதாரண] வகுப்பில் உடற்கல்வி ஒரு பாடமாகக் கற்பிக்கப்படும்.

இவ்வாறு கல்வி, உயர்கல்வி அமைச்சு நாட்டிலுள்ள பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளது.

தற்சமயம் உடற்கல்விப் பாடம் ஆண்டு 9-க்கு கீழ்ப்பட்ட வகுப்புகளிலேயே கற்பிக்கப்படுகிறது. [இ-3]

மல்லாகம் பகுதி மக்களுக்கு

வலிகாமம் தெற்கு, ஒக. 18

மல்லாகம் கிராம சேவையாளர் பிரிவில் கடந்த ஜூன் மாதம் 29ஆம் திகதி விசேட அடையாள அட்டைக்கென புகைப்படம் எடுத்தவர்கள் கிராம அலுவலருடைய மல்லாகம் அலுவலகத்தில் தங்களின் புகைப்படங்களை அடையாளங்காட்டி உறுதிப்படுத்துமாறு தெல்லிப்பழை பிரதேச செயலர் திரு. நா. வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ152)

புதிய மாணவரை சேர்க்க விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஒக. 18

ஸ்ரீலங்கா உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தில் இந்த ஆண்டுக்கான புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்நிறுவனத்தில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA)—

தேசிய வணிக டிப்ளோமா (NDBS)— பயிற்சி நெறிகளைக் கற்க தகுதியுடைய ஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் நான்கு பாடங்களில் சித்தி பெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை பார்வையிடுவதற்கும்—

மேலதிக விவரங்களை அறிவதற்கும்— யாழ். பல்கலைக்கழகத்திற்கு முன்பாக குமாரசாமி வீதியில் இயங்கும் இந்நிறுவனத்தின் வடபிராந்திய நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

பெயர்ப் பலகை நடும் வைபவம்

யாழ்ப்பாணம், ஒக. 18

சுன்னாகம் - கோட்டைக்காடு அ. த. க. பாடசாலையின் சரித்தத்தில் பெயர்ப் பலகை நடும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் உடுவில் பிரிவுக்கல்வி அலுவலகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பிரதம அதிதியாகவும், மற்றும் பல அதிபர்களும், பிரமுகர்களும் விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

பாடசாலைச் சின்னம், கீதம் என்பனவும் உருவாக்கப்பட்டு பெயர்ப்பலகையும் இப்பாடசாலையில் பெற்றோரினதும் பழைய மாணவரினதும் ஒத்துழைப்புடன் திறந்து வைக்கப்பட்டது. (இ-4)

இரு கப்பல்கள் இன்று காங்கேசன் வருகை

யாழ்ப்பாணம், ஒக. 18

யாழ். மாவட்டத்துக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் இரு கப்பல்கள் இன்று காங்கேசன் துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"மாஹோ" கப்பலில் 5 ஆயிரம்பரல் மண்ணெண்ணெய், ப. நோ. கூ. சங்கங்களுக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள், சைக்கிள் உதிரிப்பாகங்கள் ஆகியனவும்—

"ரீ யூனியன்" கப்பலில் தனியார் வர்த்தகர்களுக்கான பல தரப்பட்ட பொருள்களும்—எடுத்து வரப்படுகின்றன.

'மாஹோ' கப்பலில் வரும் பொருள்களை பருத்தித்துறையில் இறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்தது. (இ-3-5)

யுனிசெவ் பிரதிநிதிகள் யாழ். வருவர்

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து ஆராய யுனிசெவ் அமைப்பின் பிரதிநிதிகள் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வரவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காங்கேசன்துறைக்கு வந்து சேரும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் இவர்கள் வருவர் எனத் தெரிவிக்கப்பட்டது. [இ-3]

தற்போதைய நேரம் தொடர்ந்து அமுலில்!

பழையபடி மாற்றப்பட மாட்டாது

கொழும்பு - ஒக 18

இலங்கையின் நேரத்தை மீண்டும் முன்னர் இருந்தது போல் மாற்ற வேண்டிய அவசியம் தற்போதைக்கு ஏற்படாது.

இப்படி பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

தற்போது அமுலில் உள்ள புதிய நேரத்தினால் பொருளாதாரமோ, ஏனைய அபிவிருத்திப் பணிகளோ பாதிக்கப்படவில்லை என்றும் அவர் சொன்னார்.

நேரம் மாற்றப்பட்ட பின்பு ஏற்பட்ட நிலைமை குறித்து அவதானிப்பதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் குழு தினசரி ஆராய்ந்து கருத்துத் தெரிவிக்கின்றது.

தற்போதைய புதிய நேரம் எல்லோருக்கும் ஏற்றதாக இருக்கிறது என்று பலர் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

எனவே நேரத்தை மீண்டும் பழைய நேரத்துக்கு மாற்றவேண்டிய அவசியம் கிடையாது; என்றும்அவர் தெரிவித்தார்.

இலங்கையின் நேரம் தற்போது ஒரு மணித்தியாலம் முன்னால் இருப்பது தெரிந்ததே. (இ-5)

மட்டுப்படுத்தப்பட்ட அளவு மருந்து விநியோகம்

வடமராட்சி, ஒக. 18

வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசங்களில் பாதுகாப்பு அரணுக்கு வெளியே உள்ள அரசினர் வைத்திய சாலைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மருந்து வகைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள கரவெட்டி, அம்மன் கிராமிய வைத்தியசாலைகளுக்கு மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையிலிருந்தும்—

வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணி—

தென்மராட்சியிலுள்ள வரணி கிராமிய வைத்தியசாலை— ஆகிய வற்றுக்கு கொடிகாமம் (மிருசுவில்) அரசினர் வைத்தியசாலையிலிருந்தும் மருந்து விநியோகிக்கப்படுகிறது. (இ-173)

"உ" அட்டைக்காரர்கள் பாதிக்கப்படவில்லையா...?

தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து ஏப்ரல் கடைசியில் வலிகாமத்துக்கு வந்து மீளக் குடியமர்ந்த பின்னர்—

"உ" அட்டை உடையவர்களுக்கு மூன்று தடவைகள் மட்டுமே இலவச உலர் உணவு வழங்கப்பட்டது. அதன் பின்னர் முன்னரைப் போலப் பணம் கொடுத்தே பங்கீட்டு உணவுப் பொருள்களை வாங்க வேண்டியுள்ளது.

இடம்பெயர்வினால் எல்லோரும் தான் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அரச உத்தியோகத்தர்களும் தொழில் புரியும் தனியார் துறையினரும் மட்டும் பாதிக்கப்படவில்லை என்பதல்ல.

சிறுவியாபாரிகள் மட்டுமன்றி பெரிய வர்த்தகர்களில் பலர் கூட இலவசமாக உலர் உணவுப் பொருள்களைப் பெறுகிறார்கள்.

அப்படியிருக்க வெறும் மாதச்சம்பளத்தை மட்டுமே நம்பியிருக்கும் உத்தியோகத்தர்கள் "உ" அட்டை வைத்திருக்கிறார்கள் என்பதற்காக கண்ணை மூடிக்கொண்டு அவர்களின் இலவச உணவுப் பொருள் நிறுத்தப்படுவது நியாயமானதா?

இரண்டாயிரம் ரூபா சம்பளம் பெறும் சிற்றாழியரும், பத்தாயிரம் ரூபா, பதினையாயிரம் ரூபா என்று சம்பளம் பெறும் அதிகாரிகளும் ஒரே பிரிவினராக வகுக்கப்படுவது முறையல்ல.

வாழ்க்கைச் செலவு மிகவும் உயர்ந்துள்ள யாழ்ப்பாணத்தில், இரண்டு பிள்ளைகளுடன் சீவிப்பதற்கு 5,000 ரூபா சம்பளம் பெறும் உத்தியோகத்தர் பெரும் கடனாளியாகவே வாழ்க்கையை ஓட்டுகிறார்.

பல தடவைகள் இடம்பெயர்ந்த அரச ஊழியர்கள், சொந்தப்பகுதிக்கு வந்தும், சொந்தவீடு இல்லாமலும், வீடு முற்றாகவோ, பகுதியாகவோ சேதமடைந்த நிலையிலோ மற்றவர்களின் வீடுகளிலும், கொட்டில்களிலும் வாழ்கிறார்கள்.

சொத்துக்களை இழந்த நிலையில் சொந்த இடத்துக்கும் போகமுடியாதவர்களும் உள்ளனர். குறிப்பாக ஆறு வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்த வலி-வடக்கு மக்கள் அங்கும் இங்குமாக அலைந்து திரிகிறார்கள்

நாட்டு நிலைமை ஓரளவு சீரடைந்து, வழமை நிலையும், இயல்பு வாழ்க்கையும் திரும்பும் வரையாவது "உ" அட்டைக்காரருக்கும் இலவச உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

இது விடயத்தில் நிலைமையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துரைத்து, தெளிவுபடுத்தி "உ" அட்டை வைத்திருப்போரின் கஷ்டத்தை நீக்க அரச அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறைந்த சம்பளம் பெறும் உத்தியோகத்தர்களுக்காவது கஷ்டநிவாரணம் வேண்டாமா?

க. க. துரைசிங்கம்.

தெல்லிப்பழை

நல்லூர் செயலர் பிரிவு விசேட அடையாள அட்டை

யாழ்ப்பாணம், ஓக. 18

நல்லூர் கிராம அலுவலர் இல. ஜே/106 பிரிவில் விசேட அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்தவர்களில் ஒரு தொகுதியினருக்கான அடையாள அட்டைகள் நல்லூர் பிரதேச செயலர் அலுவலகத்தின் மூலம் தற்சமயம் விநியோகிக்கப்படுகின்றன.

மேற்படி பிரிவில் விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து ஏற்கனவே தமது கையடையாளமிட்ட படிவத்தைப் பூர்த்தி செய்து ஒப்படைத்தவர்கள் கிராம சேவையாளர் அலுவலகத்தில் தங்கள் பெயர் விவரங்களைத் தெரிந்து கொண்டு பிரதேச செயலர் அலுவலகத்தில் தமது அடையாள அட்டைகளைப்பெறமுடியும்.

மற்றொரு தொகுதியினரது புகைப்படங்கள் தற்சமயம் கிராமசேவையாளர் அலுவலருக்குக் கிடைத்துள்ளன.

ஏற்கனவே விண்ணப்பப்படிவத்தில் படங்களை ஒட்டி தமது கையடையாளத்தையிட்டுப் பூர்த்தி செய்து ஒப்படைக்காதவர்கள் தற்சமயம் தமது விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து ஒப்படைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-111)

வேலை வாய்ப்பா? பாணா?

கொழும்பு, ஓக. 18

700 கோடி ரூபா பணம் கோதுமை மாவுக்காக மானியமாக வழங்கப்படுகிறது. இதனை சேமிக்க முடியுமானால் 4 லட்சம் பேருக்கு தொழில் வழங்க முடியும். 4 லட்சம் பேருக்குத் தொழில் வழங்குவதா அல்லது சும்மா இருந்து பாண் சாப்பிடுவதா என்பதை மக்களே தீர்மானிக்கவேண்டும்.

இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார். (இ-4)

கடற்படைக்கு ஆள்திரட்ட நேர்முகப்பரீட்சை

கொழும்பு, ஓக. 18

கடற்படைக்குப் புதிதாக ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் இந்த மாதம் 20 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்டியிலுள்ள இராணுவத்தின் சிங்க அணியின் இரண்டாவது படை முகாம், அனுராதபுரம் இராணுவ சேவை மூன்றாவது அணி முகாம், மகாபாதியில் உள்ள கெமுனு கடற்படை முகாம், திருகோணமலை, தங்காலை, காலி கடற்படை முகாம்கள் ஆகியவற்றில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற இருக்கின்றன என்று இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் தெரிவித்தது. (இ-4)

ஞாபகார்த்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 18

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் வி. சிவசுப்பிரமணியத்தின் ஞாபகார்த்தக் கூட்டம் நாளை கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் திரு. ஆ. கமலநாதனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வு காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

வற்றாக்கை அம்மன் கோவிலில் பிரார்த்தனை நடைபெற்று அமரின் திருவுருவப் படம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு கல்லூரி மண்டபத்தில் வைக்கப்படும்.

அதன் பின்னர் கல்லூரியின் திறந்தவெளி அரங்குக்கு அமரர் சிவசுப்பிரமணியத்தின் பெயர் சூட்டப்படும்.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம உரை நிகழ்த்துவார்

பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், கலாநிதி எஸ். கிருஷ்ணராஜா, கலாநிதி கே. கந்தசாமி, திருவாளர்கள் எஸ். சிவசரவணபவன் (சிற்பி), ஏ. மகாலிங்கம், எஸ். வேலாயுதம், எஸ். இரத்தினராஜா, பி விக்னேஸ்வரன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர். (அ)

லண்டனில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ செய்தித்தகவல் அமைப்புகளை அனுமதி!

★ இஸ்ரேல் இலங்கை இராணுவத்துக்கு உதவுகின்றது!

★ எதியோப்பியாவில் ஏற்பட்டது போல் தமிழ்ப் பகுதிகளிலும் பஞ்சம் உருவாகப் போகின்றது.

— என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக்கு உதவும் நாடுகள் அங்கு சமாதான முயற்சிகளைத் தொடங்குவதற்கான சூழ்நிலை உருவாகுவதற்கு இலங்கையிடம் தமக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்றும் —

இந்தத் தார்மீக— மனிதாபிமான— பொறுப்பை உலகில் உள்ள முக்கிய நாடுகள் துறந்துவிட முடியாது என்றும்—

பிரிட்டிஷ் பிரதமருக்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இடம் பெயர்ந்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

துவமனையிலிருந்து இடம் பெயர்ந்த டாக்டர்கள் அங்குதான் பணி புரிகின்றனர். ஆனால் அங்கு மருந்துப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது — இவ்வாறு அந்தச் செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்தது. (உ)

84 லொறிகளே...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட பல மடங்கு அதிகம் என்றும் — நிவாரணப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-4)

கூட்டாட்சி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அண்மையில் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இராணுவத் தாக்குதல் தொடங்கிய பின் ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ்நாட்டுக்கு வந்திருப்பதாகவும் இந்த மாத இறுதிக்குள் அவர்களது எண்ணிக்கை 5 ஆயிரத்தை எட்டிவிடக்கூடும் என்றும் கூறினார். (இ-4)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 18-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

படையினரின் அனுமதிப்பத்திரங்களை ஒத்த போலி அனுமதிப்பத்திரங்கள்

வவுனியாவில் தமிழ் வர்த்தகர் கைதானார்

கொழும்பு, ஓக. 18

வவுனியாவில் படையினரால் வழங்கப்படும் விசேட அனுமதிப்பத்திரங்களை ஒத்த அனுமதிப் பத்திரங்களை போலியாக அச்சிட்டு மோசடி செய்ததாகக் கூறப்படும் தமிழ் வர்த்தகர் ஒருவரை படையினர் கைது செய்துள்ளனர்.

அதிகாரிகளின் போலிக் கையொப்பம் மற்றும் றப்ஸ்ராம்புகளை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட இந்த அனுமதிப் பத்திரம் 10 ஆயிரம் ரூபா வீதம் விற்கப்பட்டு வந்ததாகவும் —

பெரும் எண்ணிக்கையான புலி உறுப்பினர்கள் வவுனியா மார்க்கமாக கொழும்புக்குள் செல்ல இந்த வர்த்தகர் உடந்தையாக இருந்ததாகவும் — பொலீஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட வர்த்தகரிடமிருந்து போலி விசேட அனுமதிப்பத்திரங்களும் வவுனியா பொலீஸ் தலைமை உத்தியோகத்தரினதும் கிளிநொச்சி பிரதேச செயலரினதும் பதவி முத்திரைகளை ஒத்த றப்பர் முத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

வவுனியாவின் பல பகுதிகளிலும் 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள்

கொழும்பு, ஓக. 18

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளை அடுத்து வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் இதுவரை 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் வந்திருப்பதாக அரசாங்க அலுவலக வட்டாரங்களை மேற்கோள் காட்டி "வீரகேசரி" பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கின்றது.

கடந்த வியாழக்கிழமை வவுனியாவுக்கு வந்து சேர்ந்த ஆயிரத்து 40 பேரில் 865 பேர் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள தாண்டிக்குளம் வந்துள்ளனர். செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவுக்கும் 309 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 500 பேர் வந்துள்ளனர். அவர்கள் பெரியதம்பனை இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் அங்கு குடிதண்ணீர் பிரச்சினை பெரும் அளவில் எழுந்துள்ளது. அப்பகுதியில் 15 குழாய்க் கிணறுகளே உள்ளன. அவற்றிலும் 5 கிணறுகள் மூலமே தண்ணீர் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.— இவ்வாறு அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது. (உ-4)

நுண்கலை வளாகத்தை முழுமையாக இயங்கவைக்க முடியாத நிலை

அகதிகளைவெளியேற பதில்துணைவேந்தர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 18

மருதனார் மடத்தில் இயங்கும் பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவு வளாகத்தில் தற்காலிகமாகக் குடியிருக்கும் குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறி மாற்று இடம் ஒன்றைத் தேடிக்கொள்ள வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக பதில்துணைவேந்தர் பி. பாலசுந்தரம் பிள்ளை கேட்டுக் கொண்டுள்ளார்.

அகதிகள் வெளியேறினால் மட்டுமே பிரஸ்தாப வளாகத்தை சிறப்பாகவும் — முழுமையாகவும் — இயங்கவைக்கலாம் என்று அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். —

இங்கு மயிலிட்டியைச் சேர்ந்த சுமார் 110 குடும்பங்கள் தங்கி உள்ளன.

தமது சொந்த இடங்களில் குடியேற முடியாத நிலை இருப்பதாலேயே இவர்கள் இங்கு தங்கி உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வளாகவுப் பறைகளை ஆயத்தம் செய்ய வேண்டி ஆருப்பதாகவும் இடம்பெயர்ந்த மக்கள் தஞ்சமடைந்திருப்பதால் அது சாத்தியப்படமாட்டாது என்றும் பதில் துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பதில் துணைவேந்தர் உடனில் உதவி அரசாங்க அதிபரிடம் கோரிக்கை ஒன்றையும் விடுத்திருக்கின்றார்.

இதற்கிடையில் இடம் பெயர்ந்த மக்களை வேறொரு இடத்தில் தங்கவைப்பதற்கு உதவி அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்து வருகின்றார் என அறியவருகின்றது.

சிறந்த ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுவர்

கொழும்பு, ஓக. 18

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் சிறந்த ஆசிரியர்கள் பாடசாலை, மாவட்ட, மாகாண மட்டத்தில் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இத்திட்டம் குறித்து வடக்கு - கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். நவரட்ணராஜா தெரிவித்ததாவது:-

உலக ஆசிரியர்கள் தினம் வருடாந்தம் இலங்கையில் கொண்டாடப்படுகின்றது. இத் தினத்தை நினைவு கூரும் வகையில் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சும் மாகாணக் கல்வித் திணைக்களமும் இணைந்து இம்மாகாண ஆசிரியர்களைக் கௌரவிப்பதற்காக இவ் வாண்டிலிருந்து இச் செயல் திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் பாடசாலை மட்டத்தில் சிறந்த ஆசிரியர்களை பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களும்— மாவட்ட மட்டத்தில் சிறந்த ஆசிரியர்களை மாவட்டக் கல்விப் பணிப்பாளரும்— மாகாணமட்டத்தில் சிறந்த ஆசிரியர்களை மாகாணக் கல்விச் செயலாளரும்— புள்ளித் திட்டம் ஒன்றின் அடிப்படையில் தெரிவு செய்வர்.

இப்படி அவர் கூறினார். (இ-4)

பாண் விலை அதிகரிப்பு ஜோர்தானில் ஆர்ப்பாட்டம்

சர்வதேச நாணயச் சபையின் ஆலோசனைக்கிணங்கி ஜோர்தான் அரசாங்கம் பாண் விலையை இருமடங்காக அதிகரித்துள்ளது. இதனை ஆட்சேபித்து தற்போது நாடெங்கும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஆர்ப்பாட்டம் செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜோர்தான் மன்னர் ஹுசெய்ன் எச்சரித்துள்ளார்.

ஜோர்தான் நாடாளுமன்றத்தின் 80 அங்கத்தவர்களில் 23 அங்கத்தவர்கள் பாணின் விலை அதிகரிப்புத் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததையடுத்து கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலீசாருக்கு மிடையே இடம்பெற்ற கைகலப்பில் 6 பொலீசார் காயமடைந்தனர் எனவும் —

ஜோர்டானின் தென்பகுதியிலுள்ள கிறான் நகரில் ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்கு ஆயிரக்கணக்கான பாதுகாப்புப் படையினர் தயார் நிலையில் இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ)